நகல்:

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – மறைந்த, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் தமிழறிஞர் மறைமலையடிகள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் – மறைமலையடிகளாரின் மரபுரிமையருக்கு காப்புத் தொகை ரூ.20இலட்சமும் மற்றும் கூடுதல் செலவினம் ரூ.65,250/–க்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை – வெளியிடப்படுகிறது:

---

தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் (தவ1–1) துறை

அரசாணை (நிலை) எண்.180

நாள்: 8.7.1997

ஆனி 24, ஈஸ்வர,
திருவள்ளுவர் ஆண்டு 2028.

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித எண்.:
ஆ2/6143/97, நாள் 13.3.97 மற்றும் 9.4.97.

.........

ஆணை:

1997–98ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலாவாக தமிழ் வானில்
ஒளிவிட்டவரும் நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம்
குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப்புலவருமான
செந்தமிழ் வித்தகர்–இணையான ஏந்தல் தமிழறிஞர்
மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள
படைப்புகள் அனைத்தையும், அரசுடைமையாக்கவும்,
அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதி வழங்கவும்,
ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்"

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் தமிழறிஞர் மறைமலையடிகள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து மறைமலையடிகளாரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும், அதற்கு ஈடாக அடிகளார் குடும்பத்திற்கு காப்புநிதியாக ரூ.20இலட்சத்தை இணைப்பில் கண்டுள்ளவாறு (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அன்னாரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு சமபங்காகப் பிரித்துப் பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், அடிகளாரின் விருப்ப ஒப்பாவணத்தின்படி (Will) "அம்பிகாபதி–அமராவதி", 'மனிதவசியம்', "அறிவுரைக்கொத்து", 'திருக்குறள் ஆராய்ச்சி' ஆகிய நூல்களின் உரிமை கனகராயர் அவர்களிடம் உள்ளதாலும், இவர் அடிகளாரிடம் பல ஆண்டுகள் தொண்டு செய்துள்ளதாலும் இவர் இயற்கை எய்தியபின் அன்னாரின் மக்கள் திருவாளர்கள் 1) க.சந்திரசேகரன், 2) க.சண்முகம் மற்றும் 3) க.கண்ணப்பன் ஆகியோர்களிடம் உள்ள அனைத்து நூல்களையும் பெற்று அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கீடாக ரூ.10,000/– வீதம்

ரூ.30,000/-(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) காப்புத் தொகையாக வழங்கவும், இக்காப்பீட்டுத் தொகையினை பெறவரும் அடிகளாரின் மரபுரிமை-யாளர்களுக்கு போக்குவரத்து செலவினமாக ரூ.3,600/-(ரூபாய் மூவாயிரத்து அறுநூறு மட்டும்) மற்றும் மரபுரிமையாளர்களுக்கு சிறப்பு செய்தல் செலவினமாக ரூ.31,650/- (ரூபாய் முப்பத்தோராயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) ஆக மொத்தம் ரூ.65,250/-க்கு ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. அடிகளார் நூல்கள் அனைத்தையும் அதற்கீடாக அடிகளார் குடும்பத்திற்கு காப்புநிதி ரூ.20இலட்சம் மற்றும் திரு.கனகராயர் மக்கள் திரு.க.சந்திரசேகரன், க.சண்முகம் மற்றும் க.கண்ணப்பன் ஆகியோர்களுக்கு வழங்கும் தொகை ரூ.30,000/-மும் சேர்த்து ரூ.20,30,000/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி -
800. ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜேஜே. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்".
(த.தொ.கு.எண்.2202 05 800 ஜேஜே.0988).

6. போக்குவரத்துச் செலவு/பயணப்படிகளால் ஏற்படக்கூடிய செலவினம் ரூ.3600/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி -
001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் - I. திட்டத்தில் சேராதது - ஏஏ. தமிழ் வளர்ச்சி இயக்ககம் -
60. அலுவல் சார்பற்ற உறுப்பினர்களுக்கு பயணப்படி/நாள்படி".
(த.தொ.கு.எண்.2202 05 001 ஏஏ 6009)

7. மரபுரிமையாளர்களுக்குப் பொன்னாடை, பேழைகள், சால்வைகள் மற்றும் இதர சிறப்பு செய்தல் செலவினங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத்தொகை ரூ.31,650/-ஐ கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி -
001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் - I. திட்டத்தில் சேராதது - ஏஏ. தமிழ் வளர்ச்சி இயக்ககம் -
05. அலுவலகச் செலவுகள் - 02. ஏனைய சில்லரைச் செலவுகள்".
(த.தொ.கு.எண்.2202 05 001 ஏஏ 0523)

8. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகையைப் பெற்று மறைமலையடிகளாரின் மரபுரிமையாளர்களுக்கு காசோலை மூலம் வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. 1997-98ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்படவேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1997-98ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.191/இ.செ. (எல்எஸ்ஆர்/97) நாள் 4.7.97இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வை.பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மரபுரிமையர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் (இயக்குநர் மூலமாக).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச்செயலர், சென்னை-9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத் துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(ஒம்.)'.......,
பிரிவு அலுவலர்.

// உண்மை நகல் //

டி.சி. வெங்கடேசன் 23.7.97
கண்காணிப்பாளர்

தஅ/23/7.

23/7.

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – மறைந்த தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் தமிழறிஞர் மறைமலையடிகளாரின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் – மறைமலையடிகளாரின் மரபுரிமையினர்க்கு மட்டும் பங்கு பரிவுத் தொகை கூடுதலாக ரூ.10 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை – வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் (தவ1-1) துறை

அரசாணை (நிலை) எண்:218.

நாள்: 26-8-1997.
ஆவணி 10, ஈஸ்வர,
திருவள்ளுவர் ஆண்டு 2028.

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்:180, தமிழ் வளர்ச்சி -பண்பாட்டுத் துறை, நாள்:8.7.1997

2) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித எண்:அ2/6143/97, நாள்:6.8.97

***

ஆணை:

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் மறைமலையடிகளாரின் நூல்களை நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அடிகளார் குடும்பத்திற்கு காப்பு நிதியாக ரூ.20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அதன் இணைப்பில் கண்டுள்ளவாறு அன்னாரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு சமபங்காக பிரித்து பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிட்டது.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் தம்முடைய 6.8.97 நாளிட்ட கடிதத்தில் சென்னை கலைவாணர் அரங்கில் 4.8.97 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் மறைமலையடிகளார் அவர்களின் மரபுரிமையினருக்கு பங்கு பரிவுத் தொகையும், திரு. கவைநாயர் மக்களுக்கு உரிய காப்புத் தொகையும் வழங்கப்பட்டது என்றும் மேலும் விழாவில் மறைமலையடிகளார் மரபுரிமையினருக்குக் கூடுதலாக ரூ.10 இலட்சம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது என்றும் அக்கூடுதல் தொகை அடிகளார் மரபுரிமையினருக்கு கூடுதல் பரிவுத் தொகையாக ரூ.10 இலட்சம் இணைப்பில் உள்ளவாறு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுமாறு அரசை வேண்டியுள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு ஏற்றுக்கொண்டு மறைமலையடிகளாரின் மரபுரிமையினருக்கு கூடுதல் பரிவுத் தொகையாக ரூ.10 இலட்சத்திற்கு இணைப்பில் கண்டுள்ளவாறு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. கூடுதல் பரிவுத் தொகை அடிகளாரின் மரபுரிமையினர்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டுமென்று அரசு அறிவுறுத்துகிறது.

4. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்க்கண்டவாறு கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி – 800, ஏனைய செலவு – ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் –II. மாநிலத் திட்டம் – JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியன தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09. உதவி மானியங்கள் – 08. ஏனைய மானியங்கள்"

(த.தொ.கு.எண்:2202 05 800 JE 0988)

..2/-

6. 1997-98ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்படும் பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற் பட்டியலை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79 கேட் கொள்ளப்படுகிறார். தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி-I, பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், பின்னர் உள்ளபடியான செலவுச் சீட்டுகளின் பட முன்பணத்தினைச் சரிகட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்:3928/FS/P/97, நாள்: 22.8.97-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வை. பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மரபுரிமையர்கள் (இயக்குநர் மூலமாக)
மாநிலக் கணக்காயவுத் தலைவர், சென்னை-18/சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத் துறை (மற்றும்) இந்துசமய அறநிலையத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளர், நிதித் துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27
பிரிவு அலுவலர்.

26/8/97

எஸ்.வி.26/8.

அரசாணை (நிலை) எண்:218, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் (தவ1-1) துறை, நாள்:26-8-1997.

435

## இணைப்பு

### மறைமலை அடிகளார் நூல்கள் நாட்டுடைமையாக்கம்-கூடுதல் பரிவுத் தொகை
### ரூ.10 இலட்சம் - மரபுரிமையர்க்குப் பங்கீடு-விவரப் பட்டியல்

| மனைவி பெயர் | மகள்/மகன் தொ. எண். | மகள்/மகன் பெயர் | உரிய பங்குத் தொகை | பெயரன்/பெயர்த்தி தொ. எண். | பெயரன்/பெயர்த்தி பெயர் | வழங்கத் தக்க ஈவுத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ரூ. | | | ரூ. |
| திருமதி.சவுந்தரவல்லி (முதல் மனைவி) | 1. | திருமதி.சிந்தாமணி (மறைவு) (இவர் தம் மகள் திருமதி.ஞானாம்பாள் ஆவார். இவர் இயற்கை எய்திவிட்டார். இவர் அடிகளாரின் மகன் திரு.திருநாவுக்கரசு அவர்களின் மனைவி ஆவார்) | 90,909.00 | 1. | திரு தி.ஆலங்காடன் | 12,987.00 |
| | | | | 2. | திரு தி.திருவுடையான் | 12,987.00 |
| | | | | 3. | திரு தி.தாயுமானவன் | 12,987.00 |
| | | | | 4. | திரு தி.மகாதேவன் | 12,987.00 |
| | | | | 5. | திரு தி.சீனிவாசராகவன் | 12,987.00 |
| | | | | 6. | திருமதி பத.பரவைநாச்சியார் | 12,987.00 |
| | | | | 7. | திருமதி சு.சங்கிலி நாச்சியார் | 12,987.00 |
| | 2. | திருமதி.நீலாம்பிகையார் (மறைவு) | 90,910.00 (90,909 1) | 1. | திருமதி.சுந்தரத்தம்மை 15,151.50(அ) | 15,152.00 |
| | | | | 2. | திருமதி.சிவசங்கரி(மறைவு) 15,151.50(அ) | 15,152.00 |
| | | | | 3. | திரு.பழநிவேலாயுதம் (கணவர்) திருமதி.முத்தம்மாள் (மறைவு) (அ) திரு.பால்வண்ணன் (மகன்) 7,575.50(அ) | 7,576.00 |
| | | | | | (ஆ) செல்வி.பூங்கோதை (மகள்) 7,575.50(அ) | 7,576.00 |
| | | | | 4. | திருமதி.பிச்சம்மாள் 15,151.50(அ) | 15,151.00 |

..2/-

/3/

| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
|---|---|---|---|---|---|---|
| | 6.திரு.சுந்தரமூர்த்தி(மறைவு) | | 90,909.00 | 1. | திரு தி.முருகவேள் 22,727.25(அ) | 22,728.00 |
| | | | | 2. | திரு.மருதவாணன் (மறைவு) திருமதி.தேன்மொழி(மனைவி) 22,727.25(அ) | 22,727.00 |
| | | | | 3. | திரு.மனவழகன் 22,727.25(அ) | 22,727.00 |
| | | | | 4. | திருமதி.புனிதவதி 22,727.25(அ) | 22,727.00 |
| | 7.திருமதி.திரிபுரசுந்தரி | | 90,909.00 | | | 90,909.00 |
| திருமதி.பொன்னம்மாள் (இரண்டாவது மனைவி-மறைவு) | 1.திரு.அம்பலவாணன் (மறைவு) திருமதி.சரசுவதிவாணன் (மனைவி) | | 90,909.00 | | | 90,909.00 |
| | 2.திருமதி சோ.கலாவதி | | 90,909.00 | | | 90,909.00 |
| திருமதி.கண்ணம்மாள் (மூன்றாவது மனைவி) (மறைவு) | 1.திரு.பச்சையப்பன் | | 90,909.00 | | | 90,909.00 |
| | 2.திருமதி.திரிபுரசொக்கம்மாள் | | 90,909.00 | | | 90,909.00 |
| | | | | | மொத்தம் ரூ. | 10,00,000.00 |

(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)

வை.பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 27-8-97

26/8/97

4137

| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
|---|---|---|---|---|---|---|
| | 6. திரு. சுந்தரமூர்த்தி (மறைவு) | | 90,909.00 | | 1. திரு தி. முருகவேள் 22,727.25 (அ) | 22,728.00 |
| | | | | | 2. திரு. மருதவாணன் (மறைவு) திருமதி. தேன்மொழி (மனைவி) 22,727.25 (அ) | 22,727.00 |
| | | | | | 3. திரு. மணவழகன் 22,727.25 (அ) | 22,727.00 |
| | | | | | 4. திருமதி. புனிதவதி 22,727.25 (அ) | 22,727.00<br>90,909.00 |
| | 7. திருமதி. திரிபுரசுந்தரி | | 90,909.00 | | | |
| திருமதி. பொன்னம்மாள் (இரண்டாவது மனைவி-மறைவு) | 1. திரு. அம்பலவாணன் (மறைவு) திருமதி. சரசுவதிவாணன் (மனைவி) | | 90,909.00 | | | 90,909.00 |
| | 2. திருமதி சோ. கலாவதி | | 90,909.00 | | | 90,909.00 |
| திருமதி. கண்ணம்மாள் (மூன்றாவது மனைவி) (மறைவு) | 1. திரு. பச்சையப்பன் | | 90,909.00 | | | 90,909.00 |
| | 2. திருமதி. திரிபுரசொக்கம்மாள் | | 90,909.00 | | | 90,909.00 |
| | | | | | மொத்தம் ரூ. | 10,00,000.00 |

(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)

வை. பழனிச்சாமி,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

27-8-97
பிரிவு அலுவலர்.
26/8/97

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - மறைமலையடிகளாரின் மரபுரிமையர்களில் ஒருவரான திரு.வைரமுத்து அவர்கட்கு காப்புத்தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை - வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் (தவ1-1) துறை

அரசாணை (வாலாயம்) எண்:137. நாள்: 24-7-1998.

திருவள்ளுவராண்டு 2029,
வெகுதான்ய, ஆடி 8.

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்:180, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, நாள்:8.7.97
2) அரசாணை (நிலை) எண்:218, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, நாள்:26.8.97
3) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்:ஆ2/6143/97, நாள்: 30.6.98

*****

ஆணை:

பார்வை 1 மற்றும் 2-இல் உள்ள அரசாணைகளில் முறையே ரூ.20 + 10ஆக மொத்தம் ரூ.30 இலட்சம் மறைமலையடிகளின் நூல்களை நாட்டுடைமையாக்கப்பட்டதால் அவ்வாரின் மரபுரிமையாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. மறைமலையடிகளின் மரபுரிமையாளர்களில் ஒருவரான திரு.வைரமுத்து அவர்களின் முகவரி சரியாக கிடைக்கப்பெறாத நிலையில் அரசாணைகளின்படி அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை ரூ.30303/- + ரூ.15,151/- ஆகமொத்தம் ரூ.45,454/-ஐ அவருக்கு வழங்காமல் அரசு செலுத்துச் சீட்டின்மூலம் கருவூலத்தில் செலுத்தப்பட்டதை மீண்டும் பெற்று திரு.வைரமுத்துவுக்கு வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் உரிய ஆணையை வழங்க அரசுக்கு கருத்துரைத்துள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துரையை ஏற்று, பார்வை 1 மற்றும் 2-இன்படி திரு.வைரமுத்துவுக்கு வழங்கவேண்டிய பரிவுத்தொகை ரூ.45,454/-(ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து நானூற்று ஐம்பத்திநான்கு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேற்கண்ட தொகையினைப் பெற்று அவ்வாருக்கு வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. திரு.வைரமுத்துவுக்கு வழங்கப்பட வேண்டிய பங்குத் தொகையை கொடுப்பதற்குமுன் அவருக்கு ஒப்பளிக்கப்பட்டத் தொகையை அரசு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்துகொள்ளுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

4. பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -800. ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் -II. மாநிலத் திட்டம் - JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை- தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்"

(த.தொ.கு.எண்:2202 05 800 JE 0988)

/2/

5. பத்தி 2-இல் ஒப்பளிக்கப்பட்டத் தொகை 1998-99ஆம் ஆண்டிற்
திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்படும். அதற்கா
கருத்துருவை தமிழ் வளர்ச்சி இயக்குநர் தக்க நேரத்தில் அனுப்புமாறு கேட்டுக்
படுகிறார். மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, தமிழ் வ
இயக்குநரால் சரிகட்டப்படவேண்டிய பட்டியல் எதுவேனும் நிலுவையில் இருப்பின்
அவற்றைப் பொருட்படுத்தாமல் இப்பட்டியலை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு
அலுவலர் (வடக்கு), சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்:280/து.செ(ஆர்.பி)/9
நாள்:2[illegible].7.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்
அரசு செயலாளர்

பெறுநர்:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108
திரு.வைரமுத்து, மரபுரிமையாளர் (மறைமலையடிகள்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
மாநிலக் கணக்காயர் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காயர் தலைவர், சென்னை-35.

நகல்:

செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை,
சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

எஸ்.வி.24/7.